தொழிற்சாலைகளில் முறைமாற்றம்.

34—(* வினா எண். 119) திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தொழிற்சாலைகளில் வேலை நேரத்தை 6 மணியாகக் குறைத்து 4 முறை மாற்றம் (Shift) கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா—

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் வேலை நேரத்தைக் குறைத்து, முறைமாற்றம் செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் தற்பொழுது இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் முதன் முதலாக, இந்தியாவிலேயே மே தினத்தை விடுமுறை நாளாக அறிவித்தார்கள். அதைப்போல இந்தத் திட்டத்தையும் இந்தியாவிலேயே முதல் முறையாக ,4 முறை, தொழிலாளர்கள் வேலை செய்கின்ற 'ஷிப்ட் முறை' யைக் கொண்டு வருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை மீண்டும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பான முடிவுகளை அரசு, ஆலை நிர்வாகம், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இவர்களோடு கலந்து கொண்டு இணக்கமான முடிவுகளை மேற்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப்போன்ற திட்டத்தைக் கொண்டு வருவதால் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்லாமல் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் உதவும் என்ற வகையிலே தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடுகள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக அரசுக்கு முறையீடுகள் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த இந்தச் சங்கடங்கள் எல்லாம் முத்தரப்புப் பேச்சு வார்த்தை மூலம் முடிவு கட்டப்பட வேண்டும்.

1989 ஏப்ரல் 5]

திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த கால அனுபவங்களை வைத்து வாரத்திற்கு 5 நாள் வேலை தினங்களாக இருப்பதை 6 தினங்களாக மாற்ற வேண்டுமென்று பெருவாரியான அரசு ஊழியர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்களா? ஆம் எனில், அரசு அதைப் பரிவோடு ஆய்வு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8 மணி நேரம்தான் வேலை நேரம் என்று உலகம் பூராவும் இருக்கிற இந்த நேரத்தில் சில தொழிற்சாலைகள், குறிப்பாக செட்டிநாடு சிமென்ட் நிறுவனம் போன்ற நிறுவனங்கள், அங்கே இருக்கிற தொழிற்சங்கத்தோடு $8\frac{1}{2}$ மணி நேரம் வேலை நேரம் என்று ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தை மாற்றி 8 மணி நேரம்தான் வேலை நேரம் என்று கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை விதிகளின்படி வாரம் 48 மணி நேரம், ஒரு நாளைக்கு 9 மணி நேரத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அதற்கு முரண்பாடாக ஒப்பந்தம் இருந்தால், முறைப்படி அரசு இயந்திரங்களுக்குத் தெரிவித்தால், முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது 'பாக்டரி ஆக்ட்' பிரகாரம் 8 மணி நேரம் வேலை என்று இருக்கிறது. அந்த 8 மணி நேரத்திற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி இல்லாமல்—அவர்கள் தொழிற்சங்கத்தின் சம்மதத்தோடு என்று கூறினார்கள்—தொழிலாளர் சம்மதமோ தொழிற்சங்கத்தின் சம்மதமோ இல்லாமல் $8\frac{1}{2}$ மணி, 9 மணி, $9\frac{1}{2}$ மணி நேரம் 'ஓவர் டைம்' வேலை வாங்கப்படுகிறது. அது சம்பந்தமாக மேலதிகாரிகளுக்கு, பாக்டரி இன்ஸ்பெக்டர்களுக்கு என்ன 'கம்பிளைன்ட்' அனுப்பினாலும் அந்த அதிகாரிகள் அதுபற்றி ஒன்றும் கேட்பதில்லை; விசாரிப்பது கூட கிடையாது. குறிப்பாக, தொழிற்சாலைகள் கண்காணிப்புப் பொறியாளர் வேலூரில் இருப்பவர்—மாதம் ஒரு தடவையாவது தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்க வேண்டுமென்று இருந்தாலும், அவர் தொழிலாளர்களைச் சந்திப்பதும் கிடையாது; தொழிற்சங்கப் பிரதிநிதிகளோடு பேசுவதும் கிடையாது. ஆகையால் அப்படிப்

பட்ட அதிகாரிகள் எந்த இடத்தில் இருக்க வேண்டுமோ அங்கே அவரை இருக்கச் செய்து, விதிமுறைகளின்படி காரியங்களைச் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி தொழிற்சாலை விதிகளுக்கு முரண்பாடாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தால், அது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தொழிற்சாலை ஆய்வாளர்கள் பலமுறை சென்று முறையாக ஆய்வு செய்யவில்லை என்று சொன்னார்கள். குறிப்பிட்ட புகார் ஏதாவது இருந்தால், அந்தப் புகார் பற்றி அரசுக்குத் தெரிவித்தால், அந்தக் குறிப்பிட்ட புகாரை ஒட்டி இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரவு நேரங்களில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை அரசு அறியுமா? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் பெண்களை காலை 6—00 மணிக்கு முன்னாலும் மாலை 7—00 மணிக்குப் பின்னாலும் வேலையிலே அமர்த்தக் கூடாது என்பது விதி. அதனால் தொழிற்சாலைகள் சட்டம் 66 (1)ன் கீழ் அரசிடம் விதிவிலக்குப் பெற்று 7 மணி முதல் 10 மணி வரையில் பெண்களை வேலையில் அமர்த்தலாம். விதிவிலக்கு தரும்போது பெண்களுக்கு அங்கே பாதுகாப்பு இருக்கிறதா, அவர்களுக்கு போக்கு வரத்து வசதி இருக்கிறதா என்பதைக் கருத்தில் கொண்டு அரசு விதிவிலக்கு வழங்குகிறது. இதற்கு முரண்பாடாக எங்காவது தொழிற்சாலைகள் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் அந்தக் குறிப்பிட்ட தொழிற்சாலை பற்றி அரசுக்குத் தெரிவித்தால் உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9—40)

ஆதி திராவிடர்கள் வீடுகளின் வடிவமைப்பை மாற்றுதல்

35—(*வினா எண் 70).—திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. வீ. தமிழ்மணி, திரு. என். பழனிவேல் மற்றும் திரு. வி. தம்புசாமி: